343
OFFICE OF THE REGISTRAR OF B[illegible] MADRAS
15 FEB 1943

Reg. M. 2330. "SIDDHANTHAM" Vol. 16. No. 2

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு

| மலர் 16 | சித்திரபானு௵ மாசிமீ 1943௵ பிப்ரவரிமீ | இதழ் 2 |
|---|---|---|

பத்திராசிரியர் :—திரு. P. R. சுவாமிநாதன், M.A., L.T.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

திருவருளகம், 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை

ஆண்டுச் சந்தா ரூபா 2 தனிப்பிரதி அணா 3

## பிரிவாற்றுமை

[காரியதரிசி]

கீழைகிழார் - திவான்பகதூர் - கி. தெய்வசிகாமணி முதலியாரவர்கள் 26-1-1943 செவ்வாய்க்கிழமையன்று பிற்பகலில் அநாயாஸ முடிவெய்தியதை மிக வருத்தத்தோடு தெரிவிக்கிறோம். அவர்கள் கூட்டுறவுத் துறையில் ஜாய்ண்ட் ரிஜிஸ்த்ராராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்து 1936௵ ஓய்வு பெற்றுப் பிறகு மிகச் சிறந்த சமயத்தொண்டும் சமூகத் [illegible]து வந்தார்கள். நமது சமாஜத்தின் நிர்வாக [illegible] வழிகளிற் கலந்து கொண்டதோடு, [illegible]ண்ணாமலையில் நடந்த சமாஜ நிறைவிழா [illegible]ம் ௵ பெங்களூரில் நடந்த சமாஜ [illegible] தலைமை, வெளியூர்களில் நடந்த பல [illegible]ர தலைமை முதலிய தொண்டுகளையும்

R673m211, N128 SJ
M43-162
189786

திறமையாக நடத்தினார்கள். சென்ற ஆண்டில் சென்னைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்து அச்சங்கத் தலைவராகச் சிறந்த பல உதவிகளைச் செய்ததைத் தமிழ் மக்கள் நன்கறிவர். திருப்பதி தேவஸ்தான நிர்வாக சபையின் உறுப்பினராகவும், சென்னை தொண்டை மண்டல உயர்நிலைப் பள்ளியின் நிர்வாக சபையினராகவும், மதராஸ் சென்ட்ரல் லாண்ட் மார்ட்கேஜ் பாங்கி, பால் சப்ளை யூனியன் முதலிய பல ஸ்தாபனங்களின் டைரெக்டராகவும் சிறந்த சமூகத்தொண்டியற்றினார்கள். இவர்களுடைய பிரிவாற்றாமையைத் தெரிவிக்க நமது சமாஜக் கூட்டம் ஒன்று இராயப்பேட்டை 'குகானந்த நிலைய'த்தில் 1943ஆம் பிப்ரவரி மீ 8உ மாலை திவான் பகதூர் - T. M. நாராயணசாமிப் பிள்ளையவர்கள் தலைமையில் நடந்தது. திருவாளர்கள் - கலியாணசுந்தரனார், மீனாட்சிசுந்தரனார், இளமுருகனார், கோவைகிழார், சோமசுந்தரனார், குஞ்சிதபாதனார், இராமசுவாமி சாஸ்திரியார், சமரபுரியார், சங்கு சுப்பிரமணியனார், சாமிநாதனார், உலகநாதனார், சம்பந்தனார், தியாகராசனார் ஆகிய அன்பர்கள் பேசினார்கள். ஒரு அநுதாபத் தீர்மானம் நிறைவேறியது.

க. இரத்தின முதலியார் - இவர் பல ஆண்டுகள் சமாஜக் கணித பரிசோதகராகப் பணி புரிந்தனர். சூளை - சோமசுந்தர நாயகருடைய சீடருள் ஒருவர். 16-1-1943 சனிக்கிழமை சிவபதமடைந்தனர்.

வித்வான் - சிவகுருநாதனார் - மெய்கண்டார் மரபில் பெண்ணாகடத்திற் பிறந்து வளர்ந்த தமிழ் வித்துவான் நம் அருமைச் சிவகுருநாதனைப் போன்ற இளைஞர் ஒருவரைக் காண்பது எளிதல்ல. ஆண்டில் இளையாராயினும் அறிவிலும், இனிய பண்பிலும், சிவ பக்தியிலும், சைவத்தொண்டின் திறத்திலும் அவரை ஒப்பாரைக் காணல் அரிதினும் அரிது. தமிழ்ப் பண்டிதர்களில் சைவ சமயிகளாயுள்ளவர்கள் அவரடிச் சுவட்டினைப் பின்பற்றி நடந்தால் நம் சமயமும் தமிழ்நாடும் எவ்வளவோ மேன்மையடையும்.

கோடை விடுமுறைகளில் அவரும் அவர் மனமொத்த தோழர்களும் பல கிராமங்கட்கும் சென்று யாதொரு கைம்



மாறுங் கருதாமல் சிவப்பணி செய்து வந்துள்ளார்கள். வார வழிபாட்டுக் கூட்டங்களைச் சுமார் மூன்று ஆண்டுகளாக விருத்தாசலத் திருக்கோயிலில் நடத்தி வந்தார்கள். சைவ சித்தாந்த மகா சமாஜ இளைஞர் கூட்டத்தில் நம் சிவகுருநாதரது அன்பும், அறிவும், தொண்டாற்றுமார்வமும், திறனும் பலரறிய விளங்கின. சிறந்த சிவத்தொண்டரை நாமிழந்து விட்டோம்.

மேற்கூறிய சமாஜ அங்கத்தினரேயன்றி வேறு சிலருடைய பிரிவும் குறிப்பிடத்தக்கதே. சென்னை கிறிஸ்தவக் கல்லூரித் தமிழாசிரியரும் காஞ்சிபுரத்தில் நடந்த சமாஜ விழாவில் இளைஞர் மகாநாட்டின் தலைவருமாகிய திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியார் தமது தந்தையாரை இழந்தனர். திரிசிராப்பள்ளியில் இளைஞர் மகாநாட்டில் தலைமை வகித்த திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியாரவர்களுடைய தந்தையாரும் சிவபதமடைந்தனர். கவுணியன் பிரஸ் அதிபர் திரு. சமரபுரி செட்டியார் அவர்களுடைய மூத்த புதல்வர் இளமைப் பருவத்திலேயே சிவபதமடைந்தது பெரிதும் வருந்தற்குரியது.

இவ்வாறு ஒருங்கே ஏற்பட்ட பல பிரிவுகட்காற்றாது சமாஜம் பெரிதும் வருந்துவதைப் பிரிந்தார் உறவினர்கட்கெல்லாம் தெரிவிக்கின்றது.

189786

# மறைத்திரு ஞானியாரடிகள் குருபூசை விழா

[பத்திராசிரியர்]

திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயம் ஐந்தாம் பட்டத்து மறைத்திரு ஞானியாரடிகள் மறைந்து ஓராண்டு முடிவெய்தியது. அடிகள் மறைந்த நாளாகிய பூச நாள் சேர்ந்த வியாழக்கிழமை

(21-1-43) யன்றும் அடுத்த வெள்ளிக்கிழமை (22-1-43) யன்றும் குருபூசை விழா கொண்டாடப்பட்டது. முதல் நாள் வியாழன் காலை 8 மணிக்கு மடத்து முருகன் ஆலயத்தில் அபிஷேக முதலியன நடந்தன. அதற்குமேல் சமாதியில் அபிஷேக ஆராதனை முடிந்தது. நண்பகலில் அடியவர்கட்குப் புத்தாடையீகையும் அன்னதானமும் நடைபெற்றன. மாலை 6 மணிக்குமேல் தற்போதைய அடிகளார் முன்னர் உயர்திருவாளர்-திவான்பகதூர்-T.M. நாராயணசாமிப் பிள்ளை, M.A., B.L., President H. R. E. Board அவர்களின் சீரிய தலைமையில் கீழ்வரும் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

திரு. பு. ர. சுவாமிநாதன், M. A. L., T அவர்களால் தலைவர்க்கு வரவேற்பு கூறப்பட்டது. பின்னர் அடிகளார் உருவப்படத் திறப்பாளராகிய திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கட்கு திருவாட்டி இராஜேஸ்வரியம்மையாரால் வரவேற்புரை படிக்கப்பட்டது. தலைவர் முன்னுரை முடிந்து திரு. வி. க. அவர்களால் அடிகளார் உருவப் படம் திறந்து வைக்கப்பட்டது. அடிகளாரைப் பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. பின்னர் திரு. K. ராமநாதஞ் செட்டியார். B. A., B L, அவர்கள் "பித்தர் கூட்டம்" என்பது பற்றியும், மகாமகோபாத்தியாய, பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள், அடிகளார்மேல் தாமியற்றிய* பாக்களைப் பற்றியும்; திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை, B.A.,L.T., D.E.O. North Arcot Dt. அவர்கள் "ஞானியார் காட்டிய நன்னெறி" என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றி

---

*ஞானியா ரென்றால் நமக்குத்திருப் புலிசை
ஞானியா ரென்றே நவில்வேமால்—ஞானியார்
தோற்றந் தமிழோ சுடருஞ்சிவ நெறியோ
ஏற்ற வுலகறியு மீங்கு.

கண்டிகையு நீறுங் கவினுரு வெங்கே
தொண்டர் குழாஞ்சூழுந் தோற்றமெங்கே—தண்டாது
எளிதிற் றெடுத்துரைக்கும் இன்னுரை யெங்கேயோ
ஒளியுலகிற் காண்பேங்கொ லுற்று.



னார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் தற்போதைய அடிகளாரின் வாழ்த்துரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

மறுநாள் வெள்ளிக் கிழமை (22-1-43) காலையில் திரு. அரங்கையப் பத்தர் அவர்கள் தலைமையில் ஞானியார் மாணவர் கழகக் கூட்டம் நடைபெற்றது. திரு. சங்கரய்யர், கந்தசாமி முதலியார், சுப்பராய முதலியார், பாலசுந்தர நயினார், வித்துவான்கள் ஆறுமுக முதலியார், முருகேச முதலியார், சிவலிங்கம், திரு. சம்பந்தன், தண்டபாணி, ஏகாம்பரம், ஜயராமன் ஆம் இவர்கள் அடிகளாரைப் பற்றிச் சொற்பொழி வாற்றினர். திரு. வித்துவான் இராஜாக் கண்ணு. B. O. L அவர்கள் வந்தனத்துடன் தற்போதைய அடிகளாரின் வாழ்த்துரையுடன் கூட்டம் முடிவுற்றது.

நண்பகல் 1½ மணிக்குமேல் வேலூர் இராமமூர்த்தி கோஷ்டியாரால் தக்க பக்க இன்னிசைக் கருவிகளுடன் தமிழிசை அரங்கு நடைபெற்றது. மேற்படியார்க்கு ஒரு வெள்ளிக் கிண்ணம் பரிசளிக்கப்பட்டது.

மாலை 6 மணிக்குமேல் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் சொற்பொழிவுகள் நடைபெற்றன. "குருபரன் வருவது எப்போது", "குரு பக்தி", "நான் கண்ட ஞானியாரடிகள்" என்னும் பொருள்கள் பற்றி முறையே காஞ்சிபுரம் சிவசாமி தேசிகர், பாங்கிப் பேட்டை வித்துவான் பெரியசாமிப் பிள்ளை, பட்டம்மா அவர்கள் (கடலூர், ஆசிரியைப் பயிற்சிப்பள்ளி) ஆம் இவர்கள் பேசினர். தலைவரது இனிய முடிவுரைக்குப் பின், திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்களால் நன்றி கூறப்பட்டுத் தற்போதைய அடிகளாரால் நன்றியும் வாழ்த்தும் கூறப்பட்டு இறை வணக்கத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

இரவு மறைந்த அடிகளாரின் திரு உருவப் படம் ஊர் வலமாகக் கொண்டுவரப்பட்டது. சிதம்பரம் நாதசுர வித்துவான்கள் இன்னிசை முழக்கினர்.

# சீகாழி இளைஞர் மகா நாட்டின் தலைமையுரை

[கா. இராமநாத செட்டியார், B.A., B.L.]

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

அன்பர்களே !

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் முப்பத்தேழாவது ஆண்டின் நிறைவு விழாவுடன் நடக்கும் இளைஞர் மகா நாட்டிற்கு என்னைத் தலைமை வகிக்கும்படி சமாஜத்தினர் பணித்தனர். என்னைத் தேர்ந்தெடுத்ததன் காரணம் அறியேன். "சீலமின்றி நோன்பின்றி, செறிவேயின்றி, யறிவின்றி"க் கிடக்கும் யான் இப்பதவிக்குத் தகுதியற்றவன். ஆயினும் உங்கள் அன்பெல்லாம் என்பக்க லிருப்பதாலும், இளைஞருக்குப் பேரன்பு காட்டும் பெரிய நாயகியும் தோணியப்பரும் நமக்குத் துணை நிற்பதாலும், என்பணி இனிது நடைபெறும். இத்தொண்டு செய்யச் சமயந்தந்த சமாஜத்தினருக்கு எனது வணக்கம்.

## சீகாழி

நாம் இவ்வருஷம் சிறந்த பதிகளிலொன்றாகிய சீகாழியில் கூடியுள்ளோம். இப்பதி யாவர்க்கும் புகலிடம். இத்தலம் ஊழிக் காலத்தும் அழியாததென்பர். அதனால் இப்பதிக்குத் தோணிபுரமென்று பெயர். இங்கு பிரமபுரீஸ்வரரும் திருநிலையம்மனும், பெரியநாயகியும், தோணியப்பரும், சட்டைநாதரும் கோயில் கொண்டிருக்கிறார்கள். "ஊர் பரந்தவுலகின் முதலாகிய ஓரூரிதுவென்னப் பேர் பரந்த பிரமாபுரம்." சைவத்தை நிலை நிறுத்தியதில் முதன்மை பெற்ற ஞானச் செல்வராகிய இளைஞர் பிறந்த ஊர். இதைவிட இப்பதிக்கு வேறெச் சிறப்பு வேண்டும் ? ஆங்கிலத்தில் (See



Naples and die) சாவதற்குமுன் 'நேப்பிள்ஸ் என்ற ஊரைப் பார்' என்ற பழமொழி உண்டு. காலன் வருமுன்னர் காணவேண்டிய பதி காழி என்பர் பிள்ளையார்.

" பாவம்மேவும் உள்ளமோடு பத்தியின்றி நித்தலும்
ஏவமான செய்துசாவ தன்முனம்மி சைந்துநீர்
தீபம்மாலை தூபமுஞ் செறிந்தகைய ராகிநம்
தேவதேவன் மன்னுமூர் திருந்துகாழி சேர்மினே.

## சமய அறிவு

சகோதர சகோதரிகளே ! சைவராய்ப் பிறந்த நாம் நம் சமயத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். குறைந்தது பன்னிரண்டு திருமுறையையேனும் படிக்க வேண்டும். தமிழறிவும் நேரமும் உள்ளவர்கள் சாஸ்திரங்களையும் படிக்க வேண்டும். திருமுறைகளைப் பாராயண முறையாகப் படிப்பதொரு வழி ; அவ்வழியோடமையாது சுவைத்து ஆராய்ந்து பிற நூல்களோடு ஒப்பிட்டுப் படிக்கவேண்டும். இப்படிப் படிக்கக் காலமும் இடமும் கவனிக்க வேண்டியதில்லை. நோட் புஸ்தகமும் பென்சிலும் கூடவே யிருக்கவேண்டும். இம்மாதிரி படிக்கும் முறையில் முதலில் பெரிய புராணமும், பின்னர் திருவாசகமும் பின்னர் இதர திருமுறைகளையும் படிக்கலாம். படிக்கும்போது நடந்த நிகழ்ச்சிகளையும், தீட்டப்பட்ட ஓவியங்களையும், அடியார்கள் தன்மையையும் சிந்தித்தலும், அவைகளை மனக்கண் முன்னர் கொண்டுவருதலும் பயன் தரும். இந்நூல்களையும், அதிலுள்ள விஷயங்களையும் தொடர்ச்சியாகவோ, சொற்பொழிவுகள் வாயிலாகவோ கேட்பதால் விசாரணையும் பின்னர் தெளிவும் ஏற்படும். நம் சமய நூல்களைப் படித்த பின்னர் பிற சமய நூல்களைப் படிப்பது தவறில்லை யென்பது எனது அபிப்பிராயம். அப்படிப் படிப்பதால் நாம் நம் சமயத்தில் வைத்த பற்று அதிகரிக்கும் ; சுத்தப்படும். ஆழ்ந்து அசைவுறாது நிற்கும்.

## பெரியார் உறவு

இளைஞர்களே ! இப் படிப்புடன் பெரியார்கள் உறவு அவசியம். சமய வாழ்க்கையில் நிற்க முயலும் பெரியாரையே

நான் இங்கு குறிக்கிறேன். இவர்கள் நமக்கு வழிகாட்டியாவார்கள். அவர்கள் உறவால் நம் நம்பிக்கை உறுதிபெறும்; நம் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளலாம். சமய வாழ்க்கை வாழ வேண்டுமென்று முதலில் ஒருவன் முயலும்போது போலிகள் உறவையும், சமயத் துவேஷமுள்ளோர் உறவையும் அகற்ற வேண்டியதவசியம். அழகாக வேண்டுகின்றார் இராமலிங்க அடிகள்:

"ஒருமையுடன் நினது திருமலரடி
நினைக்கின்ற உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று
பேசுவார் உறவு கலவாமைவேண்டும்"

## கடவுள் உணர்வு

மெய்யன்பர்களே! நூலறிவும் பெரியார் உறவும் துணைகளே. அத்துணைகளால் போகும் ஊரும் அதற்கு வழியும் அறிந்துகொள்ளலாம். ஆனால் போகவேண்டியது நாமே. கடவுளுணர்வு ஏற்படும்போதுதான் சமய வாழ்க்கை ஆரம்பமாகிறது; அல்லது இறைவன்மேல் வைத்த அன்பு நன்கு நிலைபெற்ற போதுதான் சமய வாழ்க்கையின் ஆரம்பம். ஒரு சிறிதும் இறைவனை மறவாத ஞானசம்பந்தர் வாழ்க்கை பரிபூரண வாழ்க்கை. அவருணர்ந்தது அவனருள் மெய்யினையே.

"நன்னெஞ்சே யுனையிரந்தேன் நம்பெருமான் திருவடியே
உன்னெஞ்செய் திருகண்டாய் உய்வதனை வேண்டுதியேல்"

காழித்தலைவர் ஒரு பதியைவிட்டுப் புறப்படும் போது அங்கு கோயில் கொண்ட இறைவனிடம் விடைபெற்றே போவார். அவர் விடை கிடைக்காவிடின் அதை விட்டகலார். மற்ற ஊருக்குச் செல்லும் முன்னர் கோபுரத்தைக் கண்டு பாடுவார். நேரே திருமடத்திற்குப் போகாமல் கோயிலுக்குச் சென்று அண்ணலைக் கண்டு வணங்கிய பின்னரே தங்குமிடத்திற்குப் போவார். ஒவ்வொரு செய்கையையும் இறைவனைக் கலந்தே செய்வார். செய்யும் முன்னரும் செய்த பின்ன-



ரும் நாதனைக் காணுவர். காரியங்களை அவன் துணைகொண்டு செய்வர். தான் செய்ததாக நினையார். இறைவன் நாமத்தைச் சொல்லுதலும், அவனை வணங்குதலும் இப்பாவனைக்கு ஒத்தாசையாக விருந்தன. இச்செய்கைகளில் பலவற்றை யாவரும் கைக்கொள்ளுதல் கஷ்டமன்று. ஒவ்வொரு செய்கைக்கு முன்னரும் பின்னரும் ஆட்டுவிக்கும் அண்ணலை நினைப்பது சிரமமன்று; கூடும்போது நடுவிலும் நினைக்கலாம் பெருந்தகை நம்முடன் உறைபவன் என்ற பாவனை முற்ற வேண்டும். "நம்பான்றன் அடிநினைந்து மாலுருஞ் சிந்தையர்பால் வந்தூரா மறுபிறப்பே."

இம்மனப்பான்மை உண்மையாயின் நம்மைப் பிழைகள் அணுகா. நம்மிடமுள்ள குற்றங்கள் பறந்தோடும். அவைகளை விலக்க நாம் முயலவேண்டிய அவசியமில்லை.

"கண்காணி யில்லென்று கள்ளம் பலசெய்வார்
கண்காணி யில்லா விடமில்லை காணுங்கால்
கண்காணி யாகக் கலந்தெங்கு நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந் தாரே"
—திருமந்திரம் : 2067

## அன்பு

பரந்து நின்ற பரமனையறிந்த பக்தர் அன்புமயமாக விருப்பர். சிவன் அன்பு வடிவினராய போது சிவனடியார் எங்ஙனம் அன்பில்லாதவராக முடியும்? ஞானச்செல்வரன்புக்கு எல்லையில்லை. அவர் "உலகுய்யப்" பிறந்தவர்; "பாருய்ய" வாழ்ந்தவர். ஈசன் நம்மைப் படைக்கும்போதே நமக்கு உடல் தந்தார். அத்துடன் நமக்கு "அன்பெனும் [illegible]சம் வைத்தார்." உடலை வளர்க்கிறோம். அறிவை ஒரு சிறிது வளர்க்கிறோம். அன்பை மறந்து விடுகிறோம். "பெறுவது சிவன்பாலன்பாம் பேறெனப் பெருகி வாழ" வேண்டும். சிவனை உணர முயலாதார்க்குச் சமய வாழ்க்கையில்லை. அன்பை வளர்க்க மறந்தவர்க்கு மனித வாழ்க்கையில்லை. அன்பை மறந்தோரி[illegible] [illegible]றுமை, தரித்திரம், சுயநலம், போர், கொலை முதலியன தாண்டவமாடும்.

189786

அன்பும் கடவுளுணர்வும் ஒன்றுக்கொன்று ஒத்தாசையாகும்; காரண காரியமாகும்.

## தொண்டு

ஒருவரிடமுள்ள அன்பு உண்மையாயின் அது தொண்டாக மிளிரும். எவ்வடிவும் ஈசன்வடிவென்றுணர்ந்தோரும் தொண்டினைப் பெரிதாக நினைப்பர். "தொண்டின் நிலைதர" வந்தவர் காழியர்தம் காவலனார். மக்கள் தொண்டிற்கும் இறைவன் வழிபாட்டிற்கும் முரண் ஏற்பட்டபோது அவர் மக்கள் தொண்டு செய்வதே தம் கடமையெனக் கொண்டார். எம்பிரானும் அவருக்கு அவ்வாறே அறிவூட்டினார். இவ்வுண்மையை நாம் மறந்தால் சைவ சமயம் பரவாது. மக்களிடையே வேரூன்றாது. இதனை யாவரும் நன்கு சிந்திக்க வேண்டும். சமய நூற்களிலோ, கோயிலிலோ நம் சமய வாழ்க்கை முடிவடையவில்லை. சமய வாழ்க்கைக்கு வித்து அங்கே யிருக்கிறது. ஆனால் அவ்வாழ்க்கை முளைப்பதும் மலருவதும் மக்களிடையே. சக்தி பெறுவது இறைவனிடம்! அதனைப் பரப்புவது மக்களிடையே. அடியார்களிடம் மட்டுமன்று; பாமர மக்களிடையுமே. அன்பு பெறுவது ஆண்டவனிடம்; அதனை உபயோகிப்பது உலகத்தவர்க்கு. தாழ்ந்த விடத்திற்கே தண்ணீர் பாய்வதியல்பு. உயர்வற உயர்ந்து நின்ற உத்தமன் நமக்கு அன்பு காட்டுகிறான்; நாம் நம்மிலும் எளியார்க்கு அன்பு காட்ட வேண்டும். உலோபியிடம் பணம் நிறைந்து பிறருக்குப் பிரயோஜனப்படாதது போல, நமக்கு அம்மையப்பன் தந்த ஆற்றலும் அன்பும் வீணாதலாகாது.

தாய்க்குச் சிறப்பு குழந்தையைப் பாதுகாத்தலால்; தந்தைக்குச் சிறப்பு தம் மக்களுக்கு கல்வி யூட்டுவதால்; செல்வர்க்குச் சிறப்பு ஏழைகளுக்கு ஈவதால்; தொண்டர்க்குச் சிறப்பு யாவருக்கும் செய்யும் தொண்டால்.

## பொதுத் தொண்டு

சைவச் செல்வர்களே! கடவுளுணர்வும், அன்பும், தொண்டும் ஒவ்வொருவராகப் பயிலக் கூடியது. இத்துடன்



பலருடன் சேர்ந்து செய்ய வேண்டிய தொண்டிலும் ஈடுபட வேண்டும். நமது சைவ சித்தாந்த சமாஜமோ, வேறு சைவக் கழகங்களோ அல்லது சைவ மடங்களோ பொது வேலைகளில் சிலவற்றை எடுத்துக் கொண்டு செய்து பிறருக்கும் அதில் பங்கெடுத்துக் கொள்ளச் சந்தர்ப்பம் தர வேண்டும். நமது சமாஜம் பல வருஷங்களாகப் பல நூல்கள் அடக்க விலைக்குப் பதிப்பித்தும், மாத சஞ்சிகை வெளியிட்டும், கூட்டங்கள் கூட்டியும் பெருந்தொண்டு செய்துள்ளது. அத்துடன் நின்றுவிடாது மக்களிடையே செய்யும் பணியையும் ஏற்றுக்கொள்வது நலம். சாஸ்திரத் தொண்டிலும் செய்யவேண்டிய வேலைகள் சிலவுண்டு. நம் நூல்கள் பிற மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற வேண்டும். நம் சாஸ்திர நுட்பங்கள் பிற மொழிகளில் எழுதப்பட வேண்டும். இத்துறையில் "ஞானசம்பந்தம்" என்னும் சஞ்சிகை செய்யும் தொண்டு போற்றத்தக்கது. பிற மொழியிலுள்ள அரிய விஷயங்கள் நம் மொழியில் வர வேண்டும். பெரிய சைவ சித்தாந்தப் புத்தகசாலை வேண்டும். சித்தாந்த சம்பந்தப்பட்ட புத்தகங்கள் பழையவாயினும், புதியவாயினும் ஒன்றும் விடாமல் அங்கிருக்க வேண்டும். பல சாஸ்திரப் புத்தகங்கள் காலத்திற்கேற்ப, வாழ்க்கைக்கு உபயோகப் படும்படி, பரிபாஷையில்லாமல், எளிய நடையில் வெளிவர வேண்டும்.

## பள்ளிக்கூடங்கள்

சைவப் பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட வேண்டும். உயர்தரக் கல்வி புகட்டும் கல்லூரிகளும் சைவர்களால் நடத்தப்பட வேண்டும். மயிலத்தில் தமிழ்க் கல்லூரி நடப்பதும், வாலாஜாபாத்தில் ஹிந்துமத பாடசாலை நடப்பதும் மகிழ்ச்சிக்குரிய விஷயங்களே. சைவப் பள்ளிக்கூடங்களில் தோத்திர நூல்கள் கற்பித்தல் வேண்டும். சாஸ்திர உண்மைகள் சொல்லிக்கொடுக்க வேண்டும். நல்லெண்ணம், நல்லொழுக்கம் முதலியன படியும் பழக்கமேற்பட வேண்டும்.

## வைத்தியசாலைகள்

பிணியால் வருந்துவோர்க்கு மருந்து கொடுத்தல் பணி செய்தல் முதலியன சிறந்த தொண்டு. வைத்தீசுவரர் இப்பணியும் செய்கிறார்; இத்துடன் பிறவிப்பிணியும் தீர்க்கிறார். இறைவன் அப்பரது பிணி தீர்த்து அவரைச் சைவராக்கினார். சம்பந்தர் நெடுமாறன் நோய் தீர்த்து, அவனைச் சைவராக்கினார். ஆஸ்பத்திரிக்கும், சிறைச்சாலைக்கும் ஆறுதல் சொல்லவும் பணி செய்யவும் பாதிரிமார்களும் மௌலானாக்களும் போவது எனக்குத் தெரியும். சைவ சமய சந்நியாசிகள் அங்கு போய்ப் பார்த்ததில்லை. போவதாகவும் கேட்டதில்லை. அநேகமாகச் சைவர்கள் போவதில்லை. நோயாளிகளையும், கைதிகளையும் கண்டால் முட்டு வந்துவிடாது. சைவ உண்மைகளை அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும்படி சொன்னால் சாஸ்திரங்களுக்கு முட்டு வந்துவிடாது.

## சேரி வேலை

ஏழை மக்களிடம் அன்பு காட்டுக. ஏழை பங்காளருக்கு அதில் மிகப் பிரியம். ஏழைகளுக்குக் கல்வி கொடுக்கவேண்டும். வேலை கொடுக்கவேண்டும். சைவ சமயம் அன்பையும் தொண்டையும் அளவில்லாமல் உயர்த்திக் கூறுவது. அச்சமயத்தைக் குறுகிய கண்ணுடன் பார்த்து, அதன் சிறப்பிற்கு வரம்பு கட்டுதல் நியாயமன்று. கவுணியர் குலத்தோன்றலுடன் நெருங்கிப்பழகிப் பலநாள் கூடவிருந்தவர் யார்? அவர் தகப்பனாரல்லர், நாவுக்கரசருமல்லர், திருநீலகண்டயாழ்ப்பாணரே (Private Secretary) அந்தரங்கக் காரியதரிசி போல, அவரன்புக்குப் பாத்திரராய், அவருடன் சென்று பலகாலம் இடைவிடாது அளாவளாவியவர். இரவீந்தரநாத் தாகூர் இறைவனைப் பார்த்து அழகாகக் கூறுகிறார். "ஏழைகளும் தாழ்ந்தவர்களும் வாழும் இடமே உன் திருவடிகள் தங்குமிடம். உன்னை வணங்க முயலும்போது, உன் அடியிணை எவ்வளவு தூரம் கீழே போயிருக்கின்றனவோ, அந்த ஆழம் வரை என் வணக்கத்தால் எட்ட முடியவில்லை."



## கஷ்ட நிவாரணம்

வெள்ளம் வந்தபோது, பஞ்சம் வந்தபோது, காலரா பரவும்போது, சைவ சபைகளும் மடங்களும் ஒத்தாசை செய்யவேண்டும். அது சிவப்பணி என்பதை உணரவேண்டும். திருவீழிமிழலையில் பஞ்சம் வந்தபோது அப்பரும் ஞானசம்பந்தரும் என்ன செய்தார்கள்? உயிருக்குப் பயந்தா ஓடினார்கள்? 'கர்ம பயனை மக்கள் அநுபவிக்கட்டும்' என்று சாஸ்திரம் பேசி, 'சிவா, சிவா' வென்று சும்மாயிருந்தார்களா? ஞானசம்பந்தரைக் கூட்டிப்போகப் பலர் காழியிலிருந்து வந்திருந்தார்கள். பாலறாவாயருக்கும் தோணியப்பரை வணங்க ஆசை பிறந்தது. ஆகையால் பிள்ளையார் மிழலைமேவும் இறைவர் அருள்பெற்று நாளை போகலாமென்று சண்பை நகராருக்குச் சொன்னார். இது தெரிந்த மிழலையர்கள் கவுணியர்க்கும் அவருராருக்கும் பெரியதோர் விருந்து (Send off dinner) அளித்தனர். தோணியப்பர் "இங்கே உனக்கு வேலையுளது. காழிக் கோலம் இங்கே காட்டுவோம்" என்று கனவில் தெரிவித்தார். மிழலையிலுள்ள வேலையென்ன? காழிக்குப் போகாமல் செய்ய வேண்டிய காரியமென்ன? பஞ்ச நிவாரணம். அவரும் அப்பருமாகப் பஞ்சத்தை மாய்த்தனர்.

சைவம் உண்மையாக அநுஷ்டிக்கப் பட்டால், சைவப் பள்ளிக்கூடங்கள் பல தோன்றும்; வைத்திய சாலைகள் பல நாட்டப்படும்; சேரி வேலைகள் சிறந்தோங்கும்; கஷ்ட நிவாரண வேலையில் பலர் ஈடுபடுவர். பிற சமயத்தினர் இவ்வேலைகள் எவ்வளவு செய்கிறார்களென்றும், நாம் ஏதாவது செய்கிறோமா வென்றும் யோசித்துப் பார்க்க வேண்டும். அவனவன் கடைத்தேறினால் போதுமென்று நினைப்பது சைவசமயத்தில் உயர்ந்த நிலையாகக் கருதப்படுவதில்லை. சிரபுரத்துச் செல்வர் மண்ணிலுள்ளோரெல்லாம் உய்ய மண்ணில் வந்து தோன்றியவர்; உலகுக்கே உழைத்தவர். அத்தகையோரை மிகப் போற்றுவது இச்சமயம்.

அன்பர்களே! இதுகாறும் சொல்லியவற்றால் சமய நூலறிவும், பெரியாருறவும் சமய வாழ்க்கையென்னும் கட்டி

டத்திற்கு வேண்டிய பொருளெனவும், கடவுளுணர்வு அஸ்திவாரமென்றும், அன்பும் தொண்டும் வீட்டின் இரண்டு கட்டுக்களென்றும், கல்வித் தொண்டு, வைத்தியசாலை நடத்தல், சேரி வேலைகள், கஷ்ட நிவாரண சேவை முதலிய பொதுத் தொண்டுகள் அவ்வீட்டிற்கு ஜன்னல், தோட்டம், கிணறு, வெளித்திண்ணை போன்றனவென்றும் கண்டோம். இவைகளை ஆராய்ந்து, கொள்வன கொள்க. சமாஜத்திற்கும் உங்களுக்கும் பல்லாண்டும் பலநலனும் இறைவன் அளிக்கப் பிரார்த்திக்கிறேன்.

மெய்யடியார் போல மிகநடிப்பேன் மெய்யடியார்
செய்யடிமைத் தொண்டேதுஞ் செய்திலேன்—பொய்யடியேன்
உன்னுட் கமலபதத் துள்நிறையப் போரூரா
எந்நாட் கிடைக்கும் எனக்கு.

---

# தூத்துக்குடி சபை விழா

[ந. சிவகுருநாத பிள்ளை]

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 59-வது ஆண்டு நிறைவுவிழா மிகச் சிறப்பாக 29-12-42 முதல் ஐந்து நாட்கள் சிவக்கவிமணி - திரு. C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் தலைமையில் நடந்தது. முதல் நாள் மாலை வித்துவான் திரு. இராம கோவிந்தசாமி பிள்ளையவர்கள், திருப்பதி ஸ்ரீ வேங்கடேசுவர ஓரியண்டல் காலேஜ் விரிவுரையாளர் திரு. A. S. துரைசாமி பிள்ளையவர்கள் இவர்களால் முறையே "ஊனாலு முயிராலு முள்ள பயன்", "திருமுருகாற்றுப்படை" என்னும் பொருள்கள் பற்றிச் சொற்பொழிவு செய்யப்பெற்றன. இரண்டாம் நாள் காலையில் திருவாவடுதுறை ஆதீன வித்துவான் பல்கலைப் புலவர் திரு. வி. சிதம்பர ராமலிங்கம் பிள்ளையவர்கள் தலைமையில் சைவப் புலவர் கூட்டம் தொடங்கப்பெற்றது. தலைவரவர்களால் "சித்தாந்தச் செந்நெறி" என்னும் பொருள்பற்றிப் பேருரை நிகழ்த்தப்



பெற்ற பின், மருத்துவமணி திரு. K. திருமலையப்ப பிள்ளையவர்களால் "தமிழ்" என்னும் பொருள்பற்றியும், வித்துவான் திரு. A. S. துரைசாமி பிள்ளையவர்களால் "திருப்பாசுர விளக்கம்" என்னும் பொருள்பற்றியும் சொற்பொழிவுகள் செய்யப்பெற்றன. மாலை சிவக்கவிமணி - திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளையவர்கள், கன்னியாகுடி பிரசங்க பூஷணம் திரு. இராசுப் பிள்ளையவர்கள், பெருஞ்சொற் கொண்டல் திரு. புரிசை சு. முருகேச முதலியாரவர்கள் முறையே "சேரமான் பெருமாணாயனார்", "மாணிக்க வாசகர்", "கற்றவர் பாவெலாம் கண்ணுதற் காட்சியே" என்னும் பொருள்கள் பற்றி விரிவாகச் சொற்பொழிவு செய்யப்பெற்றன. தலைவரவர்கட்கும், சொற்பொழிவாளர்கட்கும் சபையாரால் நன்றி கூறப்பட்டுப் பேரவை அரநாம முழக்கத்துடன் முடிக்கப்பெற்றது. மூன்றாம்நாள் காலையில் சபையின் பாகம்பிரியாள் மாதர் சங்க மாணவிகளால் திருவெம்பாவைப் பாக்கள் நாடக ரூபமாக நடித்துக் காட்டப்பெற்றன. அதன் பின்னர் பல்கலைப் புலவர் திரு. வி. சிதம்பர ராமலிங்கம் பிள்ளையவர்களால் "குருலிங்க சங்கம வழிபாடு" என்னும் பொருள்பற்றி விரிவுரை செய்யப்பெற்றது. மாலையில் ஷை பிள்ளையவர்கள் தலைமையில் பேரவை தொடங்கப்பெற்றது. "காஞ்சிப் புராணம்" என்னும் பொருள்பற்றிய தலைமைப்பேருரைக்குப்பின் திருநெல்வேலி திரு. சு. நல்லகண்ணுப் பிள்ளையவர்களால் "கண்ணப்பர் அன்பின் பெருமை" என்னும் பொருள் பற்றியும், கன்னியாகுடி பிரசங்க பூஷணம் திரு. இராசுப் பிள்ளையவர்களால் "தடாதகைப் பிராட்டியார்" என்னும் பொருள்பற்றியும், பெருஞ்சொற் கொண்டல் புரிசை. சு. முருகேச முதலியாரவர்களால் "அரிமுகத் தவுணனும் அறுமுகத் தமலனும்" என்னும் பொருளில் ஒரு பகுதியும் சொற்பொழிவுகள் செய்யப்பெற்றன. தலைவரவர்களால் நுண்பொருள்கள் பொதுள முடிப்புரை கூறப்பட்டது. அடுத்த நாள் மாலை "அரிமுகத் தவுணனும் அறுமுகத் தமலனும்" என்னும் சொற்பொழி

வின் பகுதி பெருஞ்சொற் கொண்டலவர்களால் சொற்பொழிவு செய்யப்பெற்று முடிக்கப்பெற்றது. சபையைச் சேர்ந்த பாகம்பிரியாள் மாதர் சங்க 15-ஆம் ஆண்டு நிறைவு விழா திருமதி ஆ. வள்ளிமயிலம்மையாரவர்கள் தலைமையில் பல பெண்மணிகளின் சொற்பொழிவுடன் நிகழ்த்தப் பெற்றது. அடுத்த நாள் மாலை "தெய்வயானை அம்மையார் திருமணம்" பெருஞ்சொற் கொண்டலவர்களால் விரிவாகச் செய்யப்பெற்றது. இவ்வாறாக ஐந்து நாட்கள் சபையின் 59-ஆம் ஆண்டு நிறைவு விழா எல்லாம் வல்ல இறைவன் திருவருட்டுணையால் மங்களகரமாக இனிது நிறைவேறிற்று.

189786

---

## பொத்தனூர் ஞானியார் சங்க ஆண்டு விழா

இச்சங்கத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவுவிழா 22-1-43ல் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் தலைமையில் நடந்தது. திருவாளர்கள் வை. பொன்னம்பலனார், T. S. சோமசுந்தரம் பிள்ளை, பாலைப்பட்டி ஜமீன்தார் நஞ்சைய கவுண்டர் அவர்கள் முறையே புலவர் உள்ளம், மாணிக்க வாசகர், தமிழ் வளர்ச்சி என்பன பற்றிப் பேசினார்கள்.

---

## திருவெம்பாவைச் சொற்பொழிவு

13-1-43 புதன் மாலை திரு. கோவைகிழார் நமது சமாஜப் பொதுக் கூட்டத்தில் இராயப்பேட்டையில் திருவெம்பாவை பற்றிப் பேசினார்கள்.

---

பூவாளூர் சைவ சித்தாந்த சபையின் 33-ம் ஆண்டு நிறைவிழா 21-2-43-ல் திரு. க. வச்சிரவேல் முதலியாரவர்கள் தலைமையில் நடைபெறும்.

Printed at the Sadhu Press, ..., Ganapathi Mudali Street, Royapettah, by T. V. Vol... (Publisher) for the Saiva Siddhanta Maha Samajam at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.